## தினகரன் (25.04.2025)

### காகித ஆலை சார்பில்

# நடமாடும் இலவச மருத்துவ முகாம்

## 2087 பேருக்கு மருத்துவ உதவி



காகித ஆலை சார்பில் நடமாடும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

வேலாயுதம்பாளையம், ஏப். 25: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் மூலம் 2087 பேருக்கு மருத்துவ உதவி செய்யப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் உடல்நலனை பேணுவதற்காக தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர். முனைவர். சந்திப் சக்சேனா, 21.02.2025ல் துவக்கி வைக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இம்முகாம் பொது மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்வதற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், காகிதபுரம் மற்றும் ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, கோயமுத்தூர் உடன் இணைந்து காகித ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம். கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளில் உள்ள 49 கிராமங்கள் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது. இநிலையில் நேற்று முன்தினம் 50-வது கிராமமாக பொன்னியாக்கவுண்டன் புதூருடன் இரண்டாம் மாத மருத்துவ முகாம் நிறைவு பெற்றது. மேற்கண்ட மருத்துவ முகாமில் 859 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து மாத்திரைகளும் காகித நிறுவனத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் நடந்த மருத்துவமுகாமில் 1228 பொதுமக்கள் பயன் பெற்றனர். நேற்றுவரை மொத்தம் சுமார் 2087 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். இந்த மருத்துவ முகாம்களை காகித நிறுவனம் தொடர்ந்து நடத்திவருகிறது.

தினத்தந்தி (25.04.2025)



# மருத்துவ முகாம்

நொய்யல், ஏப்.25-

கரூர் மாவட்டம் புகழூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் உடல்நலனை பேணுவதற்காக தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாமை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவரும், மேலாண்மை இயக்குனருமான சந்தீப் சக்சேனா வால் தொடங்கி வைத்தார். இம்முகாமானது பொது மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்வதற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையுடன் இணைந்து காகித ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளில் உள்ள 50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் இலவச மருத்துவ முகாம் நடந்தது. இதில் 859 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து, மாத்திரைகளும் காகித நிறுவனத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ முகாம்களை காகித நிறுவனம் தொடர்ந்து நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

**தினமணி (25.04.2025)**

# டிஎன்பிஎல் ஆலையின் நடமாடும் இலவச மருத்துவ முகாமில் 2,087 பேருக்கு மருத்துவ உதவி




பொன்னியாக்கவுண்டன்புதூரில் புதன்கிழமை நடைபெற்ற முகாமில் பொதுமக்களுக்கு மருத்துவ சிகிச்சையளிக்கும் மருத்துவ குழுவினர்.

கரூர், ஏப். 24: டிஎன்பிஎல் ஆலை சார்பில் நடைபெற்ற நடமாடும் இலவச மருத்துவ முகாம் மூலம் 2,087 பேருக்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டுள்ளதாக ஆலை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கரூர் மாவட்டம், புகழூர் காகித ஆலையின் சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நாள்தோறும் இலவச மருத்துவ முகாம் கடந்த பிப்ரவரி 21-ஆம் தேதி நிறுவனத்தின் தலைவர் சந்தீப்சக்சேனா தலைமையில் தொடங்கி வைக்கப்பட்டது.

காகித நிறுவனம் மற்றும் கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பில் நடைபெற்ற இந்த இலவச மருத்துவ முகாம், காகித ஆலையைச் சுற்றியுள்ள 50 கிராமங்களில் புதன்கிழமை வரை நடைபெற்றது.

இதில் பொதுமக்களுக்கு ரத்த அழுத்தம், கர்ப்பப்பை புற்றுநோய், நீரிழிவு உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து முகாமின் நிறைவு நாளில் பங்கேற்ற, ஆலையின் தலைவர் சந்தீப்சக்சேனா கூறுகையில், காகித நிறுவனம் சார்பில் நடைபெற்ற இந்த தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம்களில் 2,087 பேர் மருத்துவ உதவி பெற்றுள்ளனர் என்றார் அவர்.

காலைக்கதிர் (25.04.2025)

# நடமாடும் மருத்துவ முகாம் இதுவரை 2,087 பேர் பயன்

கரூர், ஏப். 25

புகழூர், டி.என்.பி.எல்., நிறுவனத்தின் சார்பில் நடந்த நடமாடும் மருத்துவ முகாமில், 2,087 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

புகழூர், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின், சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ், நடமாடும் இலவச மருத்துவ முகாமை மேலாண்மை இயக்குனர் சந்தீப் சக்சேனா கடந்த பிப்., 21ல், தொடங்கி வைத்தார். இதையடுத்து புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி டவுன் பஞ்., வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய பஞ்சாயத்துகளில் தொடர்ந்து மருத்துவ முகாம்கள் நடக்கிறது.

இதில், பொன்னியாக் கவுண்டன்புதுாரில், 50 வது மருத்துவ முகாம் நடந்தது. 859 பேருக்கு மருத்துவ ஆலோசனை, சிகிச்சை, தேவைப்பட்டோருக்கு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை நடந்த மருத்துவ முகாமில், 2,087 பேர் பயனடைந்துள்ளனர்.




■ கரூர் மாவட்டம் புகழூர் அருகில், பொன்னியாக் கவுண்டன் புதுாரில், டி.என்பி.எல்., நிறுவனம் சார்பில் நடந்த மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.